இவ்வாண்டில் ஐயா அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து இருபத்து ஐந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. அம்பலவாணர் என்ற சொல் தொடருக்குரிய பொருளே ஆகாயத்தில், வான வெளியில் வாழ்பவர் என்பது தான். அவ்வாறு வாழ்பவரை நினைவில் நிறுத்தும் வண்ணம் ஒவ்வொரு திருமுறை மாநாட்டிலும், முதல் சொற்பொழிவை அம்பலவாணர் நினைவுச் சொற்பொழிவு நிகழ்ச்சியாக மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினர் நடத்தி வருகின்றனர். அதனுடன் இந்த ஆண்டு அவரது 25 ஆம் ஆண்டு நிறைவு நாளை ஒட்டி ஒரு நூல் வெளியிட்டுள்ளனர். இதனை வாங்கி சைவ அன்பர்கள் படித்து ஐயா அம்பலவாணரின் தொண்டினைப் போற்றி, அவர் காட்டிய வழியில் திருமுறைப் பணி செய்து சைவத்தையும் தமிழையும் சிங்கையில் வளர்க்கப் பாடுபட வேண்டும் என்பதே எங்கள் வேண்டுகோளாகும்.

சிங்கைப் பதிதன்னில் செந்தமிழும் சைவமும்,
மங்காமல் என்றும் மலர்ந்திடவே - கங்குல்
பகல்கரு தாதுழைத்த அம்பல வாணர்
புகழோங்கி வாழ்க பொலிந்து.

சுப. திண்ணப்பன்
மதியுரைஞர்,
திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு

சிங்கப்பூர் திருமுறைச் செல்வர் அம்பலவாணர்

புலவர் மணி, சித்தாந்த வித்தகர்
முரு.பழ. இரத்தினம் செட்டியார்

சிவத்திரு அம்பலவாணர் அய்யா அவர்களை சிங்கப்பூர்த் தமிழ் உலகம் மிக நன்றாக அறியும். தன் வாழ்நாள் முழுவதும் திருமுறையைப் பரப்ப வேண்டும் என்னும் குறிக்கோளை மனதில் கொண்டு எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் விடாது செயலாற்றிய பெருமகனாக அவர் விளங்கினார்.

ஆண்டு தோறும் திருமுறை விழாவைக் குறித்த நாளில் செவ்வனே ஏற்பாடுசெய்து நடத்தி வந்தார். இந்தியாவில் இருந்தும் இலங்கையில் இருந்தும் மலேசியாவில் இருந்தும் சைவப் பேரறிஞர்களை வரவழைத்து அரிய சொற்பொழிவுகளை ஆற்றுமாறு செய்வித்தார். ஒரு நாளைக்கு நான்கு அல்லது மூன்று திருமுறைகளைப் பேசுமாறு அமைத்து மூன்று நாட்கள் நடத்தி பன்னிரு திருமுறைகள் அனைத்தையும் நிறைவு செய்வது அவர் வழக்கம். அடுத்த ஆண்டு நிகழ்ச்சிக்கு முதலாண்டிலேயே திட்டமிட்டு எழுத வேண்டியவர்களுக்கெல்லாம் எழுதி விழாவை மிகச் சிறப்புடன் நடத்தி வந்தார். தள்ளாத வயதாக இருந்தும் பார்வை சரியாகத் தெரியாதிருந்தும் கொஞ்சமும் தளராமல் திருமுறைத் தொண்டினை அவர் செய்து வந்ததைப் பாராட்டுவதற்கு வரிகள் இல்லையென்றே சொல்லலாம். மரணத் தருவாயில் திருமுறை மாநாட்டை நடத்திவிட வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். மருத்துவமனையில்

படுக்கையில் இருக்கும் போதும் திருமுறை மாநாட்டின் நினைவாகவே இருந்தார். நாங்களெல்லாம் மாநாடு முடித்துதான் அவர் உயிர் பிரியுமென்று நினைத்தோம். ஆனால் மாநாட்டிற்குச் சிறிது நாளைக்குமுன் அவர் இறைவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார். அவ்வாறு நிகழ்ந்தும் அவரின் அன்பர்கள் அவர் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் திருமுறை மாநாட்டைக் குறிப்பிட்டபடி நடத்தி வைத்தனர். அவர் இருக்கும் பொழுது நடந்தது போலவே மாநாடு செவ்வனே நடைபெற்றது. ஆண்டு தோறும் திருமுறை மாநாடு நடைபெறுவதற்காக ஒரு தொகையினை அய்யா அவர்கள் எடுத்து வைத்திருக் கிறார்கள். இதுமட்டுமின்றி ஏனையோரிடமும் தொகை வசூல் செய்து ஓர் அறக்கட்டளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அய்யா அவர்கள் போலவே அவர்தம் துணைவியாரும் திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். அய்யா அவர்கள் எழுதிவைத்தபடி எல்லாம் செவ்வனே நடைபெற அம்மையார் அவர்கள் துணையாக இருக்கிறார்கள்.

திருமுறைத் தொண்டு மிகச் சிறந்தது என்பது மட்டுமல்லாமல் சைவ உலகத்திற்கு மிகவும் பயன் விளை விக்கக் கூடிய ஒன்றாகும். ஏனைச் சமயத்தவர்கள் தத்தம் வேதங்களைப் பரப்புவதற்கு எவ்வளவோ முயற்சி செய்து வருகிறார்கள். நம் சைவ வேதமாகிய திருமுறைகளைப் பரப்புவதற்குத் தமிழ்நாட்டிலும் சரி, மலேசியாவிலும் சரி, சிங்கப்பூரிலும் சரி பலர் முன் வரவில்லை. அய்யா அவர்கள் தான் முனைந்து நின்று தன்னந்தனியாக இச்செயலைத் தொடங்கினார்கள். மிகு திறம்பட நடத்திய இச்செயலால் சிங்கப்பூர் சைவ உலகமும் தமிழ் உலகமும் அவர்களுக்கு மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. இளைஞர்கள் திருமுறைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அவர் தொண்டு மிகவும் பயன்பட்டிருக்கிறது.

திருமுறைத் தொண்டைச் சைவ சாத்திரங்கள்

பதிபுண்ணியம் எனச் சொல்கின்றன. திருமுறைத் தொண்டு செய்பவர்கள் மீண்டும் பிறவா நிலையை எய்துவார்கள் என்பது சைவ சாத்திரத் துணிபாகும்.

என்னைப் பொறுத்தவரையில் திருமுறை மாநாட்டில் பல்லாண்டுகள் கலந்து கொண்டுமிருக்கிறேன். தலைமை வகித்துமிருக்கிறேன். பின்னர் உடல்நலக் குறைவால் மாநாட்டிறகு வர இயலாமல் பல ஆண்டுகள் சென்று விட்டன. அய்யா அவர்கள் இதுகுறித்து மிகவும் வருந்தினார்கள். உடம்பைச் சரிசெய்து கொண்டு வாழுவீர்கள் என வற்புறுத்தினார்கள். ஆனால் திருமுறை நடக்கின்ற மாதங்களில் வர இயலாமல் அதற்குப் பின்னரே இந்தியாவில் இருந்து இங்கு வந்து சேர்ந்தேன். நான் வந்த செய்தியைக் கேள்விப்பட்டதும் அவர்கள் தம் வீட்டிற்கு என்னை அழைத்து வீட்டிலேயே சொற்பொழிவு செய்யுமாறு ஏற்பாடு செய்தார்கள். அன்பர்கள் பலரை அழைத்துக் கேட்கச் சொன்னார்கள். இப்படிச் சில ஆண்டுகள் நான் இந்தியாவில் இருந்து வந்து அவர்கள் வீட்டில் சொற்பொழிவாற்றி யிருக்கிறேன். கடைசியாக சொற்பொழிவாற்றுவதற்கு ஒரு தேதியைக் குறிப்பிட்டார்கள். ஆனால் அதற்குள் அவர்கள் மருத்துவமனை செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அங்கிருந்தவாறே சிவபதவி அடைந்து விட்டதால் நான் பேச முடியாமல் போய்விட்டது. அவர் காலமான செய்தியை அறிந்து சைவ உலகமும் தமிழ் உலகமும் கண்ணீர் விட்டு கதறின. இனி இத்தகைய அரும் தொண்டரை காண்பது அரிது அரிது என யாவரும் சொன்னார்கள்.

அண்ணல் அவர்களின் பூத உடல் மறைந்து விட்டாலும் புகழ் உடல் என்றும் நிலைத்திருக்கவே செய்யும். அவர்கள் நடத்தி வந்த திருமுறை மாநாட்டை அன்பர்கள் தொடர்ந்து நடத்தவே செய்வர். எனவே அவர்கள் ஆன்மா பரிபூரண சாந்தியெய்தும் என்பதில் சந்தேகமில்லை.

கிடைத்தற்கரிய சைவத் தொண்டராகிய அம்பலவாணர் அவர்களின் திருவடிகளை மனத்திற்கொண்டு அவர்கள் நடத்தி வந்த திருமுறை மாநாட்டை நாமும் தொடர்ந்து நடத்தி வருவதுதான் நாம் அவர்களுக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

வாழ்க திருமுறைகள்! வாழ்க அம்பலவாணன்!

(1993ஆம் ஆண்டு எழுதப்பட்டது)

அம்பலவாணரையா அவர்கள்... சில நினைவுத் துளிகள்

Dr இராம கருணாநிதி, PBM, தலைவர்,
சிங்கப்பூர் திருமுறைமாநாட்டு ஏற்பாட்டுக்குழு

அமரர் க. அம்பலவாணரையா அவர்கள் (ஐயா) அடியேனுக்கு அறிமுகமானது 1986ம் ஆண்டில். அதே ஆண்டில் தான் என்னை அருள்மிகு உருத்திர காளியம்மன் ஆலயத்தின் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். உடனே ஆலயத்தின் முன்னைய தலைவர் திரு டி முத்துக்குமார் அவர்களும் திரு இராசையா அவர்களும் (நெடுநாள் துணைத் தலைவர்) என்னை ஐயா அவர்களிடம் அறிமுகப்படுத்தி வைத்தனர். அன்று முதல் நானும் ஐயாவும் திருமுறைச் சிந்தனைகளில் ஐக்கியமாகிவிட்டோம். இச்சைவப் பெரியாருக்குத் தெரியும் என்னை எங்கு எப்போது தொலைபேசியில் பிடிப்பது என்று! அலைபேசி அரிதான காலம் அது. அடுத்த ஆண்டே எங்கள் ஆலயம் 7ஆம் திருமுறை மாநாட்டின் புரவலரானது.

எங்கள் உறவும் நாளுக்கு நாள் வளரத் தொடங்கியது. ஆரம்ப கட்டத்தில் ஐயாவின் பேச்சு பெரும்பாலும் அறிவுரை யாகவே அமைந்தது. "பல்கலைக் கழகத்தின் சேவையே பெரிது எனக் கருதிவிடாமல் உங்கள் வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தையும் சீர் தூக்கிப் பாருங்கள்" என்பார்.

ஆலயங்களில் பூசை வழிபாடு மட்டும் போதாது, மக்களிடையே, குறிப்பாக, இளைஞர்களிடத்தே, திருமுறைச்